# ஜீவனுள்ள தேவன்




நம்முடைய தேவன் ஜீவனுள்ள தேவன் என்று வேதவசனம் கூறுகிறது. ஆம் இப்பூமியில் வாழும் அனைத்து உயிரினங்களுக்கும் ஜீவன் தந்தவர் அவரே. **“தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான். “ (ஆதி** 2:7), ஆம், இங்கு மண்ணாகிய மனுஷனுக்குள் ஆண்டவர் தமது ஜீவனை அனுப்பின பொழுது, அவன் ஜீவனுடையவனானான். இங்கு நாம் கவனிக்க வேண்டிய ஒன்று மனிதர்கள், மிருகங்கள், பறவைகள், மீன்கள், மரம், செடி, கொடிகள் போன்றவற்றில் மட்டுமல்ல பூமியில் உள்ள ஒவ்வொரு பொருளிலும், ஒவ்வொரு தூசு மண்ணிலும் கூட அவருடைய சிருஷ்டிக்கும் தன்மை உள்ளது. தண்ணீர், காற்று, சூரியன், சந்திரன் என்று ஒவ்வொரு சிருஷ்டிப்பிற்குள்ளும் அவருடைய ஜீவன் வெளிப்படுகிறது.

ஒரு சிறிய உதாரணமாக, ஒரு மரம் வளர்வதை நாம் காணலாம். அடிப்படையாக அந்த மரம் வளர்வதற்கு கண்கூடாக தெரியும் காரணங்கள் முதலாவது அதின் விதை, மண், பிறகு பாய்ச்சப்படும் தண்ணீர், மற்றும் சூரிய ஒளி. இங்கு நாம் காணும் ஒவ்வொன்றிற்குள்ளும் ஒரு வித ஜீவன் உண்டாயிருக்கிறது. அதன் விதை அந்த மரம் எப்படிப்பட்டதாக இருக்கவேண்டும் என்பதை தீர்மானிக்கிறது. மேலும் மண், தண்ணீர், சூரிய ஒளி என ஒவ்வொன்றிற்குள்ளும் இருக்கும் ஜீவன் அந்த விதைக்குள்ளாக பாய்ச்சப்பட்டு அது வளர்கிறது. இங்க ஆச்சரியமானது என்னவெனில் உயிர் உள்ளவைகள் என்று நாம் காணும் மனிதன், மிருகம், மரம், செடி,

கொடிகள் தவிர தண்ணீர், காற்று, மண், சூரிய ஒளி என ஒவ்வொன்றிலும் ஜீவன் மறைந்து இருப்பதை நாம் காணலாம்.

ஆம், நம்மை சுற்றி உள்ள ஒவ்வொரு இயற்கை பொருளிலும் அவருடைய ஜீவன் மறைந்திருக்கிறது. ஒரு மரத்தை வளர்ப்பதற்கு எல்லாவற்றையும் கொடுத்து, சூரிய ஒளி படாவிட்டால் அது வளராது. எனவே ஒரு மரம் வளர்வதற்குள்ளாகவே இத்தனை நிகழ்வுகள் நடப்பது ஆச்சரியமானதாகும். நமக்கு கூட நாம் சுவாசிக்கும் காற்று, பருகும் தண்ணீர், சாப்பிடும் உணவு, சூரிய ஒளி என ஒவ்வொன்றிலும் இருந்து ஏதோ ஒரு வித ஜீவன் நமக்குள்ளாக பாய்ச்சப்பட்டு, நாம் ஜீவனோடு வாழும் படியாய் செய்கிறது. கண்ணுக்கு தெரியாத காற்றில் இருந்து கண்ணுக்குத் தெரியும் பொருள்கள் வரை ஒவ்வொன்றிற்குள்ளும் அவருடைய ஜீவன் மறைந்து இருக்கிறது.

**யோ 1:3,4** வசனங்கள், ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைக்குறித்து, **“சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது.“**, என்று கூறுகிறது. ஆம், அந்த ஜீவனே, பிதாவாகிய தேவனுக்குள்ளும், குமாரனாகிய கிறிஸ்து இயேசுவுக்குள்ளும் இருந்து வெளிப்பட்டு பூமியிலுள்ள ஒவ்வொன்றையும் ஜீவனோடு வைத்திருக்கிறது. **“தேவன் இல்லை என்று மதிகேடன் தன் இருதயத்தில் சொல்லிக்கொள்ளுகிறான்;“,( சங் 53:1)**, ஆம் தேவன் எங்கே, அவர் இருப்பதற்கான அடையாளம் என்ன என்று கேட்கும் மதிகேடரான மக்களுக்கு விடை, பூமியில் உள்ள ஒவ்வொரு பொருளும் ஆகும். மேலும் சொல்லப்போனால் அவனுக்குள் இருக்கும் ஜீவனே சாட்சி.

இப்படிப்பட்ட அவருடைய ஜீவனே செத்துப்போன நிலைமையில் இருக்கும் ஒவ்வொன்றிற்கும், மறுபடியும் ஜீவனை கொடுக்கிறது. ஆதி மனிதன் செய்த பாவத்தினால், மனுகுலம் நித்தியஜீவனை இழந்தது மட்டுமல்ல, மரணம் (ஜீவனில்லாத தன்மை) பூமியில் உள்ள ஒவ்வொன்றையும் ஆண்டு கொண்டது. அதன் விளைவு மனிதர்கள் நித்தியஜீவனற்றவர்களாய், தேவனைக் குறித்த உணர்வற்றவர்களாய் கல், மரம், மிருகம் என தன்னுள் ஜீவன் இல்லாதவைகளை தெய்வங்களாக ஏற்படுத்திக் கொண்டனர். ஆனால் **“அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போலிருந்தார்; இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்.“ (அப் 17:30).** ஆம் இதற்கு காரணம் **“இயேசு: பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி, ஜீவனை விட்டார்.“ (லூக் 23:46).**

**யோ 10: 15 இல் "நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்."** என்றார். மேலும் **யோ 10: 17, 18 வசனங்களில் "நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன் என்றார்."** என்றும் கூறப்பட்டுள்ளது. **"அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம்", (1 யோ 3:16)** என்றும் வேத வசனம் கூறுகிறது.

ஆம், அவருடைய அன்பு, தயவு. இரக்கம், கிருபை, திட்டம், நோக்கம் என அனைத்தும் செயல்படுவது அவருடைய ஜீவன் நமக்குள்ளாக பாய்ச்சப்படுவதின் மூலமாகவே. ஜீவ காலமெல்லாம் மரண இருளின் மத்தியில், வியாதியின் மத்தியில், குறைவுகள் மத்தியில் ஒரு செத்த நிலைமையிலே காணப்படும் அனைத்தையும் அவருக்குள்ளாக இருந்து வெளிப்படும் ஜீவனே புத்துயிர் அடையச் செய்கிறது. **அப் 3;6** கூறுகிறது, **"அப்பொழுது பேதுரு: வெள்ளியும் பொன்னும் என்னிடத்திலில்லை; என்னிடத்திலுள்ளதை உனக்குத் தருகிறேன்; நசரேயனாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே நீ எழுந்து நட என்று சொல்லி;"**, ஆம், அவர்கள் மூலமாக வெளிப்பட்ட தேவனுடைய உயிர்பிற்க்கிற வல்லமையே அந்த மனிதன் மீது செலுத்தப்பட்டு சுகத்தைப் பெற்றுக் கொண்டான். அதே அதிகாரத்தில் **"ஜீவாதிபதியைக் கொலைசெய்தீர்கள்; அவரைத் தேவன் மரித்தோரிலிருந்தெழுப்பினார்; அதற்கு நாங்கள் சாட்சிகளாயிருக்கிறோம்." (அப் 3:15)** என்றும் அப். பேதுரு கூறுகிறார்.

ஆம் சிருஷ்டிப்பு ஒவ்வொன்றிற்குள்ளும் தம்முடைய ஜீவனை வைத்திருக்கிற அவரே ஜீவாதிபதி. இக்கொரோனா காலத்திலும் இன்றைய நிலவரப்படி 12/09/2020, 2 கோடியே 86 லட்சம் மக்கள் உலகமெங்கிலும் பாதிக்கப்பட்டு, 9 லட்சத்து 19 ஆயிரம் மக்கள் மரித்துப் போன நிலையில், கடந்த எட்டு மாதங்களில் பூமி முழுவதுமே ஒருவித மரண இருள் சூழ்ந்திருக்கிறது வியாதியின் வேதனையும், மரண ஓலங்களும் பூமி எங்கும் கேட்கப்படுகிறது. இப்பொழுது இவற்றிலிருந்து நம்மை விடுவிக்க கூடிய ஒரே ஒருவர் ஜீவாதிபதியாகிய கிறிஸ்து இயேசுவே.

ஆம் அவரால் அன்றி இப்பொழுது இருக்கும் இச்சூழ்நிலையில் மாற்றத்தை எவராலும், எந்த அரசாங்கத்தாலும், எந்த அதிகாரத்தாலும் கொண்டுவர முடியாது. எனவே சிறியோர் முதல் பெரியோர் வரை, அதிகாரத்தில் இருப்போர் முதல் சாமானிய மனிதர் வரை, ஜீவனுள்ள தேவனிடத்தில் தங்களை அர்ப்பணித்து, இந்த (பாவ) மரண இருளில் மடிந்து போகாதபடி முழங்கால்படியிடகடவது. கர்த்தர் தாமே தயவாய் இறங்கி தமது ஜீவனால், நம் ஒவ்வொருவரையும் இந்த மரண இருளுக்கு விலக்கிக் காத்துகொள்வாராக. தேவன் தாமே, தமது தீர்மானத்தின்படியே சகலத்தையும் மறுபடியும் சகஜ நிலைக்கு திரும்பி வரச் செய்ய அவரையே நோக்கி மன்றாடுவோமாக. அவரே நம் பரிகாரியாகிய கர்த்தர். ஆமென், அல்லேலூயா.